## 25-08-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு
## தலைப்பு : வரலாற்றியல் பொருள்முதல்வாதம்
## தொடக்கவுரையாடல் : சி. சிவசேகரம்

"சமூகம் என்பது தனிமனிதர்களைக் கொண்டதல்ல. மாறாக அது மனிதர் உட்பட்டு நிற்கும் மனிதரிடையிலான உறவுகளின் ஒட்டுமொத்தத்தைக் கூறுவதாகும்." - கார்ல் மாக்ஸ்.

வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்பது இன்னொரு வகைப் பொருள்முதல்வாதமல்ல.

அது சமூக ஆய்வு, பொருளியல், வரலாறு போன்ற துறைகளுக்கு இயங்கியல் பொருள்முதல்வாத அணுகுமுறையைப் பயன்படுத்தும் ஆய்வுமுறையைக் குறிக்கிறது. "அரசியற் பொருளியலின் விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு" என்ற நூலில் மாக்ஸ் "வராலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தியல்" என அதனைச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

மனித இருப்பிற்குரிய உற்பத்தியில் மனிதர் தங்கள் விருப்புக்கட்கும் அப்பாற் திட்டவட்டமான உற்பத்தி உறவுகளுள் அமைகின்றனர்.

அவ் உறவுகளின் திரட்சி சமூகத்தின் பொருளியல் அமைப்பாக அமைகிறது. அவ் அமைப்பின் மீதே சட்டத்தையும் அரசியலையும் கொண்ட ஒரு மேற்-கட்டுமானமும் அதைச் சார்ந்து குறிப்பான உணர்வு நிலைகளும் அமைகின்றன.

பொருள் சார்ந்த உற்பத்தி முறை சமூக, அரசியல், ஆய்வறிவுச் செயற்பாடுகளின் பொதுவான விருத்திப் போக்கை ஆற்றுப்படுத்துகிறது. எனவே மனிதரின் உணர்வுநிலை அவர்களின் இருப்பைத் தீர்மானிப்பதற்கு மாறாக மனிதரின் இருப்பு மனிதரின் உணர்வுநிலையைத் தீர்மானிக்கிறது.

ஏதோ ஒரு நிலையில் சமூக உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளுடன் கடுமையாக முரண்படுகையில் பழைய சொத்துடைமை உறவுகள் விருத்திக்குத் தடையாகின்றன. அதன் பயனாகச் சமூகப் புரட்சி உருவாகிறது. பொருளாதார அடித்தளமும் முழு மேற்கட்டுமானமும் மாற நேருகிறது. இம் மாற்றங்களை உணர்வு நிலைகள் மூலமின்றிப் பொருள்சார்ந்தே விளக்க இயலும்.

வரலாற்றியல் பொருள்முதல்வாதம் பின்வரும் நியதிகளின் அடிப்படையில் விருத்தி பெறுகிறது எனலாம்.

1. மனித சமுதாயத்தின் அடிப்படை மனிதர் தமது இருப்பிற்கான உற்பத்திக்காக இயற்கையுடன் பூணும் உறவு பற்றியது.
2. உற்பத்திக்கான உழைப்பு சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்த வர்க்கங்களிடையே பங்கிடப்பட்டுள்ளது.
3. வர்க்க அமைப்பு உற்பத்தி முறை மீது தங்கியுள்ளது.
4. உற்பத்தி முறை உற்பத்திச் சக்திகளின் நிலையில் தங்கியுள்ளது.
5. சமூக மாற்றம் ஆதிக்க வர்க்கத்திலும் மாற்றத்தைக் கொண்டுவருகிறது.

வரலாற்றியல் பொருள்முதல்வாத அணுகுமுறையின் பயனாக, அரசியல் நிகழ்வுகளையும் வரலாற்று நிகழ்வுகயையும் தனிமனித அடிப்படையிலன்றிப் பொதுமைப்படுத்தப்பட்ட சமூக நிகழ்வுகளாக, அவற்றின் சமூகக் கரணங்களது அடிப்படையில் விளங்கிக்கொள்ள இயலுமாகியுள்ளது.

வரலாற்றியல் பொருள்முதல்வாதத்திற்கு முந்திய அணுகுமுறைகள் விளக்கத் தவறிய சமூகச் செயற்பாடுகளையும் வரலாற்றையும் வரலாற்றியல் பொருள்முதல்வாதம் விளக்க இயலுமாக்கியுள்ளது.

வரலாற்றியல் பொருள்முதல்வாத நோக்கில் வரலாறு விருத்திபெறும் முறையின் அடிப்படைகள் பின்வருமாறு எனக் கூறப்பட்டுள்ளது:

1. சமூக முன்னேற்றம் பொருளும் உற்பத்திச் சக்திகளும் சார்ந்த முன்னேற்றத்தின் வழியிலானது.
2. மனிதரின் உற்பத்தி உறவுகள் சமூக உறவுகளை நிர்ணயிக்கின்றன.
3. உற்பத்தி உறவுகளின் விருத்தி உற்பத்திச் சக்திகளின் விருத்தியைச் சார்ந்தது.

(மிகுதி அடுத்த பக்கம்)



மாவை வரோதயன்
(இயற்பெயர் : சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்) (12.9.1965 - 29.08.2009)

ஒரு கவிதையாளராக, சிறுகதையாளராக, கட்டுரையாளராக என்று பன்முகப்பட்ட முகங்களைக் காட்டியிருக்கிறார், அவர் நாடகங்களை எழுதியிருக்கிறார். வில்லுப்பாட்டு எழுதி அதில் நடித்திருக்கிறார். தேசியக் கலை இலக்கியப் பேரவையின் முக்கிய உறுப்பினராக இருந்தார். கொழும்பிலே தேசியக் கலை இலக்கியப் பேரவையின் இலக்கியக் குழுச் செயலாளராக அவர் நீண்டகாலம் பணியாற்றிக் கொண்டிருந்தார். சில்லையூர் செல்வராசன் செய்து கொண்டிருந்த "பா வளம்" "கவிதைக் கலசம்" போன்ற வானொலி நிகழ்ச்சிகளிலே பங்குபற்றியிருக்கிறார்.

தேசியக் கலை இலக்கியப் பேரவையின் மாசிகையான தாயகம் பத்திரிகையிலே "வலிகாமத்து மண்ணின் மைந்தர்கள்" என்ற தலைப்பிலே, வலிகாமம் பகுதியிலே வாழ்ந்த மனதைக் கவர்ந்த நபர்கள், பாத்திரங்கள் பற்றி தொடர்ச்சியாக எழுதி வந்தார். அதைத் தவிர ஐம்பெருங்காப்பியங்களை வைத்துக் கொண்டு அவர் நாடகங்களை எழுதியிருக்கிறார். அவற்றை வினோதன் கலை இலக்கிய மன்றம் ஒவ்வொரு மாதமும் நடத்திய நிகழ்விலே அந்த நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் சில :
* இன்னமும் வாழ்வேன் : கவிதைத்தொகுதி (2000)
* வேப்பமரம் : சிறுகதைத்தொகுதி (2002)

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

செய்திமடல் - 15 | 01-09-2011

**வரலாற்றியல் பொருள்முதல்வாதம்**
**முன் பக்கத் தொடர்ச்சி..**

4. உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் விருத்தியின் அளவையும் வகையையும் தீர்மானிக்க உதவுகின்றன.
5. உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும் மனித இனத்தின் நோக்கங்களையும் விருப்புக்களையுங் கடந்து முன்னேறுகின்றன.
6. சமுதாயத்தின் மேற்கட்டுமானம், ஈற்றில், சமுதாயத்தைத் தாங்கிநிற்கும் உற்பத்திச் சக்திகளதும் உற்பத்தி உறவுகளதும் வெளிப்பாடே.
7. ஒவ்வொரு வகையான அரசும் சமூகத்தின் ஆளும் வர்க்கத்தின் அதிகாரத்ததைச் செலுத்தவும் பாதுகாக்கவுமான வல்லமைமிக்கதொரு கருவியே.
8. சமூக அரசியல் எழுச்சிகளின் ஊடாகவே அரச அதிகாரம் ஒரு வர்க்கத்திடமிருந்து இன்னொரு வர்க்கத்திற்குக் கைமாறுகிறது.
9. ஒருவகையான உற்பத்தி முறை உற்பத்திச் சக்திகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்குத் துணையாக இல்லாதுபோயின், முன்னேற்றம் தடைப்படும் இவ்வது புரட்சியொன்று நிகழும்.
10. வரலாற்றின் செயல்முறை முன்கூட்டியே முடிவான ஒன்றல்ல. அது வர்க்கப் போராட்டத்தின் மீதே தங்கியுள்ளது.

மேற்கூறிய சித்தரிப்பு சூட்சுமமானது.யதார்த்தமான வரலாற்றுப் புரிதலுக்கு ஸ்தூலமான நிலைமைகளின் ஸ்தூலமான ஆய்வு அவசியம்.

சமூக ஆய்விற்கான விஞ்ஞானரீதியான ஆய்வுமுறைகளுள் வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தை முக்கியமான ஒன்றாகக் கொள்ளலாம். அது, "உலகை அறிவது அதனை மாற்றுதற்கே" என்ற மாக்சிய இலக்கிற்கு முக்கியமான ஒரு கருவியாகும்.

சமூக நீதிக்கான போராட்டங்கட்கும் சமூக மாற்றத்துக்கும் வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் முக்கியமான பங்களிப்புக்களில் இரண்டைக் குறிப்பிடுவதாயின்:

1. வரலாற்றை விளங்கிக் கொள்வதில் வர்க்கப் போராட்டத்தின் தலைமைப் பங்கு அறியப்பட்டுள்ளது.
2. அதன் தர்க்கரீதியான நீட்சியாக மக்களே வரலாற்றின் உந்துசக்தி என்ற சனநாயகக் கோட்பாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

[ஸ்ற்றாலினினின் "இயங்கியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும்" என்ற நூல் விசேடமாகப் பரிந்துரைக்கத் தக்கது. மாஓவின் மெய்யியல் பற்றிய நான்கு கட்டுரைகளும் இத் தொடர்பிற் பயனுள்ளவை].

**செ. கணேசலிங்கன் கருத்துரைத்தபோது,**

இன்று முதலாளித்துவப் பொருளாதாரம் தேக்க நிலை அடைந்திருப்பதற்கான முக்கியகாரணம் தொழிநுட்ப வளர்ச்சியாகும் என்று விளக்கினார்.

மேலும் அவரது கருத்துக்களாகக் கூறப்பட்டவை வருமாறு,

தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக பலர் செய்யும் வேலையை ஒருவரே செய்து முடிக்கக்கூடிய நிலை காணப்படுவதால் வேலைவாய்ப்பின்மை பாரிய பிரச்சினையாக மேற்கு நாடுகளில் எழுந்துள்ளது. இதற்கு முன் இவ்வாறான தேக்க நிலை உருவானபோது உலகமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டு Outsourcing மூலம் பிரச்சினையை தீர்க்க முயற்சி செய்யப்பட்டது. இப்போது உள் நாட்டிலேயே வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகள் உருவாகிவிட்டதால் தொழிலை வெளியில் கொண்டு செல்லும் உத்தியும் பயனற்றுப்போகிறது. அரசாங்கங்கள் முதலாளிகளுக்குச் சார்பாக இருப்பதால் வரியையும் அதிகரிக்க முடியாது. அதே நேரம் அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுத்திருக்கும் வசதிகளையும் கைவிட முடியாது. பூதாகரமாக வளர்ந்திருக்கும் நுகர்வுக் கலாசாரத்தையும் கட்டுப்படுத்த முடியாது. இந்த நிலையே பெரும் தேக்கமாக உருவெடுத்துள்ளது.

இதற்கான தீர்வாக நாம், மார்க்சிஸ்டுகள் சோசலிசப் பொருளாதார முறையை பரிந்துரைக்கிறோம். இந்த தேக்க நிலை எல்லாம் சோசலிசத்தை நோக்கியே வழிநடத்தும் என்று கருதுகிறோம்.

## பகவத் கீதை : அறிமுகம்

*01-09-2011 அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - ஐ. மனோறா*

பகவத் கீதை என்பது மகாபாரதத்தின் மத்தியில் பீஸ்ம பர்வத்தில் 25-43 அத்தியாயம் வரையிலான 18 அத்தியாயங்களில் 700 சுலோகங்களைக்கொண்ட ஓர் உபதேசப் பகுதியாகும். பகவான் கிருஷ்ணர் சிறந்த வில் வீரனான அர்ச்சுனனுக்கு சம்வாத முறையில் அளித்த உபதேசமாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற மனிதனது புருஷார்த்தங்களில் வீட்டைப்பற்றிப் பேசினாலும் அன்றாட வாழ்க்கையில் பல குழப்பங்களின் மத்தியில் சிக்குண்டிருக்கும் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். காரண காரிய முறைப்படி தர்க்க ரீதியான விளக்கங்களைக் கொண்ட சிந்தனைக்கருவூலமாகும்.

1. முன்னுரை :

* பகவத் கீதை என்றால் என்ன?
* அது உபதேசிக்கப்பட்ட பின்னணி.

2. உட்கரு

* கீதை மனித இனத்துக்குச் சொல்லும் செய்தி.
* விஞ்ஞான ரீதியாகச் சிந்திக்கின்ற இளைஞர்களுக்கு அது எவ்வாறு ஏற்புடையதாகின்றது..

3. ஆத்மா என்றால் என்ன? அவ்யக்தம் அசிந்திய அரூபம் இலக்கணங்களை விளக்குதல்

4. யோகம் என்றால் என்ன? ஞானயோகம், கர்ம யோகம், பக்தி யோகங்களை விளக்குவது

5. கீதையிலிருந்து முக்கியமான பாடல்களை எடுத்து அவைகள் இன்றும் எவ்வாறு சிந்தனைக் கருவூலங்களாகத் திகழ்கின்றன என்று விளக்குதல்.
(கால அவகாசத்திற்கேற்ப பாடல்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்)

6. கலந்துரையாடல்

---

**மாவை வரோதயனின் 2ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு**
*04-09-2011 ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00*

கைலாசபதி கேட்போர் கூடம்
தேசிய கலை இலக்கியப் பேரவை.
(57115, காலி வீதி, வெள்ளவத்தை )

**நிகழ்ச்சிகள்**

**தொடக்கவுரை :** சோ. தேவராசா
**தலைமையுரை :** சி. சிவசேகரம்

**மாவை வரோதயனின் கவிதைகளில் சமுதாய நோக்கு**
- மு. மயூரன்
**மாவை வரோதயனின் கதைகளில் மக்களின் வாழ்வு**
- ச. சுதாகர்
பாடல்கள்

**சமூக விஞ்ஞான வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**